**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 108** **நாள்: 13.08.2016**

# மெரினா கடற்கரையில் 25 வயதுடைய 25–30 அடி உயரம் வளர்ந்த நிழல் தரும் மரங்கள் – நடவு! பெருநகர சென்னை மாநகராட்சி தீவிரம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் ஆணையாளர் முனைவர். தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி பூங்கா துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 68வது பிறந்தநாள் தினத்தை முன்னிட்டு, சென்னை மெரினா கடற்கரையில் உழைப்பாளர் சிலை முதல் கலங்கரை விளக்கம் வரை 3 கி.மீ. தூரத்திற்கு 215 நிழல் தரும் மஞ்சள் நிறமுடைய பூக்கள் பூக்கும் Peltophorum (பெருங்கொன்றை) மரம் நடப்பட்டு வருகிறது.

இந்த மரங்களை மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் சைதை துரைசாமி அவர்களின் மனித நேயம் ஐ.ஏ.எஸ் கட்டணமில்லா கல்வி அறக்கட்டளை இலவசமாக வழங்குகிறது.

இனிவரும் காலங்களில் மக்கள் பயன் பெறும் வண்ணம், புதியதாக அமைக்கப்படும் சாலைகள், அலுவலக வளாகங்கள் மற்றும் பூங்காக்களில் உடனடியாக நிழலை தரும் இதுபோன்ற வளர்ந்த மரங்களையே நடவு செய்திட பெருநகர சென்னை மாநகராட்சி திட்டமிட்டுள்ளது.

முதல் கட்டமாக 25–30 அடி உயரம் வளர்ந்த மரங்களை நடவு செய்து 2 மாதங்கள் சோதனை செய்யப்பட்டது. இந்த சோதனையில் நடவு செய்யப்பட்ட மரங்களில் புதிய இலைகள் துளிர்விட்டு வெற்றிகரமாக உயிர் பெற்றதை உறுதி செய்தபின் தற்போது 100 மரங்கள் நடவு செய்யப்பட்டுள்ளது. ஆகஸ்டு மாதத்திற்குள் மீதமுள்ள 115 மரங்களும் வெற்றிகரமாக நடவு செய்யப்படும். இம்மரங்கள் வரும் ஏப்ரல், மே மாதங்களில் முழுமையான நிழல் தரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**